பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஹு மாசி ீ 22 உ புதன்கிழமை (06-03-1991) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 99

# நேற்றும் தொடர்ந்து குண்டு வீச்சு நாசம்!

## யாழ். கலட்டிச் சந்தியில் ஒருவர் பலி! மூவர் காயம்!!

திருநெல்வேலி, மார்ச் 6

யாழ். பல்கலைக்கழகத்துக்கு அருகே கலட்டிச் சந்தியில் நேற்று இரண்டு தடவைகள் பொம்மர் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இத் தாக்குதல்களில் அந்த இடத்தைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார். மூவர் காயமடைந்தனர்.

நேற்று நண்பகல் 1.45 மணியளவில் நகரை வட்டமிட்ட இரண்டு பொம்மர்களில் ஒன்று அதிக உயரத்தில் பறந்தவாறு ஒரு குண்டை வீசிவிட்டுச் சென்றது.

அந்தக் குண்டு கலட்டிச் சந்தியில் உள்ள வெறும் வளவு ஒன்றில் விழுந்து

[4 ஆம் பக்கம் பார்க்க]

## முரசுமோட்டையில் பெண் மரணம்; துண்டிக்கப்பட்ட தலை மரத்தில்!

கிளிநொச்சி, மார்ச் 6

கிளிநொச்சி முரசுமோட்டை 2ஆம் கட்டை குடியிருப்புப் பகுதிகள் மீது நேற்று மாலை 4 மணியளவில் நடைபெற்ற விமானக் குண்டு வீச்சில் ஒரு பெண் மணி உடல் சிதறிப் பலியானார். 6 பேர் காயமடைந்தனர்.

முரசுமோட்டையைச் சேர்ந்த சதாசிவம் தங்கம்மா [வயது 46] என்பவரே சம்பவத்தில் இறந்தவராவார்.

இவரது கணவர் வே. சதாசிவம் [வயது 60], திருமணமான இவரது மகள் த. கமலவேணி [வயது 28] ஆகியோர் காயமடைந்தனர்.

மேலும் நாகலிங்கம் பவளம் [வயது 60], அவரது மகள் அமிர்தலிங்கம் விஜயலட்சுமி [வயது 45], விஜயலட்சுமியின் பிள்ளைகள் அ. சந்திரமோகன் [வயது 12], அ. நிமலன் [வயது 9] ஆகியோரும்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பாடசாலைகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 6

வடக்கில் ஸ்ரீலங்கா விமானப் படையினரின் விமானக் குண்டு வீச்சு நாசம் நேற்றும் இரண்டாவது நாளாகத் தொடர்ந்தது.

இத்தாக்குதல்களினால் பாடசாலைகள், உயர் கல்வி நிலையங்கள் ஆகியவற்றில் பாட போதனைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

காலை முதல் மாலை வரை மாறி, மாறி பல பகுதிகளில் விமானங்கள் வட்டமிட்டதால் அனேகமான பாடசாலைகள் இயங்கவில்லை. பாடசாலைகளுக்கு மாணவர்கள் வரவும் குறைந்திருந்தது. வந்த மாணவர்களும் அடிக்கடி பாதுகாப்பான இடங்களை நாடி ஓட வேண்டியிருந்தது. இதனால் அனேகமாக— எல்லா — பாடசாலைகளும் நண்பகலுக்கு முன்னரே மூடப்பட்டன.

யாழ். பல்கலைக்கழகம், கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி, திறந்த பல்கலைக் கழகம் ஆகியவற்றுக்கு நடுவே —கலட்டிச் சந்தியில் — இடம்பெற்ற குண்டு வீச்சினால் உயர்கல்வி மாணவருக்கான போதனையும் பாதிக்கப்பட்டது.

பல இடங்களில் பாடசாலைகளுக்கு சமீபமாக உள்ள இடங்களில் குண்டு வீச்சுக்கள் இடம்பெற்றன.

## வயோதிபப் பெண்மணி நல்லூரில் மரணம்

நல்லூர் கோவில் வீதியில்— சங்கிலியன் வீதிக்கு சமீபமாக நேற்றுக் காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் வயோதிப மாது ஒருவர் அந்த இடத்திலேயே பலியானார்,

கோவில் வீதியைச் சேர்ந்த கந்தையா இராசம்மா [68 வயது] என்பவரே பலியானவராவார்.

அந்தப் பகுதியில் வீசப்பட்ட இரண்டு குண்டுகளால் மூன்று வீடுகளும் இரு சிறிய கடைகளும் சேதமடைந்தன.

[உ-3-143-111-15-69]

## நெல்லியடியிலும் தாக்குதல்

நெல்லியடி கரவெட்டியில் நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் ஒரு வீடு முற்றாகச் சேதமடைந்தது மேலும் இரு வீடுகளும், ''அறிவாலயம்'' வாசிகசாலையும் பலத்த சேதமடைந்தன.

இரு பொம்மர்கள் இப்பகுதியில் 4 குண்டுகளை வீசின. அவற்றின் ஒரு குண்டு வெடிக்கவில்லை.

[உ-15]

## மயானத்துக்கு அருகே மாது மரணம்! 8பேர் காயம்!!

யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ்ப்பாணம் கோம்பையன் மணல் மயானத்திற்கு அருகே — சுடுகாட்டு ஆலடிக்குப் பக்கத்தில் நேற்றுக்காலை 8.30 மணியளவில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் சின்னம்மா மாணிக்கம் [வயது 70] என்ற வயோதிப மாது உயிரிழந்தார்.

எட்டுப் பேர் காயமடைந்தனர். ஒரு வீடு பெருஞ் சேதமடைந்தது.

எஸ். கனகேஸ்வரி [வயது 54 — கந்தர்மடம்], எஸ். மதிவதனி [வயது 13 — கந்தர்மடம்], திருமதி. நடராசா கெங்கா லட்சுமி [வயது 40 — ஆனைக்கோட்டை], ஆர். சண்முகேஸ்வரன் [வயது 29 — யாழ்ப்பாணம்], ஒட்டுமடத்தைச் சேர்ந்த மகாதேவா நாகேஸ்வரி [வயது 45] அவரது பிள்ளைகளான எம். ஆனந்தநாயகி [வயது 16], எம். மனோகரன் [வயது 12], மற்றும் சாந்தகுமாரி [வயது 23] ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

இந்தச் சம்பவத்தில் இரண்டு வண்டில் மாடுகளும் உயிரிழந்தன.

[உ-15-51]

# தமிழர் ஆதரவு புலிகளுக்கே! இந்தியா ஏற்றுக் கொள்கிறது

இலங்கைத் தமிழர்களில் பெரும்பான்மையானோரின் ஆதரவு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கே உண்டு. இதனை இந்தியாவும் ஏற்றுக்கொள்கிறது.

எனவே அங்கு தனிநாடு கோரிப் போராடும் தமிழர்களின் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர விரும்பினால் —

இலங்கை அரசு அங்குள்ள தமிழருக்கு அதிகப்படியான தன்னாட்சி உரிமைகளை வழங்கவேண்டும்.

இவ்வாறு இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. முச்குண்ட் துபே இலங்கை அதிகாரிகளிடம் எடுத்துக் கூறினார்.

புதுடில்லியில் நடந்த இந்திய - இலங்கை நாடுகளின் உறுப்பினர்களைக் கொண்ட கூட்டம் ஒன்றில் வைத்தே திரு. துபே இவ்வாறு வலியுறுத்தி உள்ளார்.

இலங்கைப் பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை மூலமாகத் தீர்வு காண முடியாது; சமாதானப் பேச்சுவார்த்தை மூலமாகவே நிரந்தரத் தீர்வு காண முடியும் — என்றும் திரு. துபே கூறியிருக்கிறார்.

## கோண்டாவிலில் மீண்டும் அதே பகுதியில் தாக்கு!

திருநெல்வேலி, மார்ச் 6

கோண்டாவில் அரசடிப் பிள்ளையார் கோயிலடியில் நேற்றும் இரண்டு தடவைகள் பொம்மர்கள் தாக்குதல்களை நடத்தின.

காலை 8-30 மணியளவில் கோவிலுக்கு அண்மையில் வீசப்பட்ட குண்டு வெடிக்கவில்லை.

மீண்டும் பிற்பகல் 3-30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சில் இரண்டு வீடுகள் சேதமடைந்தன.

இப்பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உட்பட எட்டுப் பேர் மரணமடைந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

[உ-143-154-15-69]

## ப. நோ. கூ. சங்கங்களில் இனி குறைவு விலையில் பொருள்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், இனிமேல் அத்தியாவசிய உணவுப் பொருள்களை, இப்போது அமுலில் உள்ள கட்டுப்பாட்டு விலைகளை விடக் குறைந்த விலைகளுக்கு விற்கவுள்ளன.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட நேற்றைய கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

கட்டுப்பாட்டு விலையை விடக் குறைந்த விலையில் விற்கப்பட உள்ள பொருள்களில் அரிசி, மா, சீனி என்பனவும் அடங்கும் என அறியப்படுகிறது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



உதை ஏற்றுக்கொள்ள இவ் [illegible]

[illegible]

## அச்சுவேலி தம்பாலையில் சிலர் காயம்; வீடுகள் சேதம்

அச்சுவேலி, மார்ச் 6

அச்சுவேலியில் நேற்று இரண்டாவது நாளாக பொம்மர் தாக்குதல்கள் இடம்பெற்றன. சிலர் காயமுற்றனர்.

சந்நிதி கோயில் வீதி தம்பாலையில் நேற்றுக் காலை 8.45 மணிக்கு இரண்டு குண்டுகள் வீசப்பட்டன.

இதனால் இரு வீடுகள் முற்றாகத் தகர்ந்தன. மேலும் நான்கு வீடுகள் சேதமுற்றன.

அச்சுவேலிக்கு அகதியாக இடம் பெயர்ந்து வந்திருந்த எஸ் தம்பிராசா [வயது 58] படுகாயமடைந்தார்.

[உ-11-15]

## கரம்பனில் ஷெல் தாக்கி ஒரு வீட்டில் ஐவர் காயம்

ஊர்காவற்றுறை இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு ஏவப்பட்ட ஷெல் கரம்பன் கிழக்கில் ஒரு வீட்டில் விழுந்து வெடித்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் படுகாயமடைந்தனர். வீடு சேதமடைந்தது.

பாக்கியநாதர் நிக்கலஸ் [வயது 34] அவர் மனைவி நி. மேரி அஞ்சலா [வயது 30] பிள்ளைகளான பிரேமளா [வயது 15], பிரேம் லக்ஷ்மன் [வயது 13], நிசாந்தி [வயது 9] ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

[உ-15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### O/L விஷேட பரீட்சை (1991)

1990 Dec இல் நடைபெற்ற O/L பரீட்சை வினாத்தாள் தொகுதி [ஆங்கில வினாத்தாள், சமூகக் கல்வி படவேலை வினாத்தாள் அனைத்தும் உட்பட] விற்பனையாகிறது. ஆங்கில வினாத்தாள் தனியாகவும் பெற்றுக்கொள்ளலாம். சொற்ப பிரதிகளே கைவசம் உண்டு. விவரங்களுக்கு: எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் இருபாலைச் சந்தி. [16048]

### மில்க்வைற் திரவ சவர்க்காரம்

வெற்று அரைப்போத்தல் திருப்பித் தந்து போத்தலுக்கு ரூபா 1/- பெறுங்கள். மில்க்வைற் - யாழ்ப்பாணம். [சி-5819]

### சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். ''சக்தி சரவணா'' 210, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக] தினசரி பகல் 9 மணி தொடக்கம், 3 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. [16037]

## 200 பேர் வரை விசாரணையில்

கொழும்பு, மார்ச் 6

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா கொலையுண்ட சம்பவம் தொடர்பாக சுமார் இருநூறுபேர் இதுவரை விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர் என்றும் —

உருப்படியான துப்பு ஏதும் இதுவரை கிடைக்கவில்லை என்றும்—கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. [இ-எ]

## ஓய்வுபெறும் அரச ஊழியர்

கொழும்பு, மார்ச் 6

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பணிபுரிந்து ஓய்வுபெறும் அரச ஊழியர்கள் தாங்கள் கடமையாற்றிய திணைக்களங்கள் ஊடாக ஓய்வூதியத் திணைக்களக் கொழும்புத் தலைமையகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியத் திணைக்களப் பணிகள் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பன்முகப்படுத்தப்படாது இருப்பதே இதற்குக் காரணம் என அறிவிக்கப்படுகிறது. [இ-எ]

### யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

## தொழிலாளர் கல்விப் பாடநெறி

மேற்படி பாடநெறிக்கு விண்ணப்பம் கோரி ஏற்கனவே வெளியாகியுள்ள விளம்பரம் தொடர்பாக அறிவிக்கப்படுவது:

இப் பாடநெறியைப் பயின்று சித்தி எய்தும் தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் கல்விச் சான்றிதழ் யாழ்ப்பாணம், பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும்.

பதிவாளர்.

[சி-5815]

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

திரு. முத்தையா மகாதேவன் [M. A.]

[முன்னாள் ஆசிரியர் பரமேஸ்வராக் கல்லூரி, இளைப்பாறிய உப அதிபர் முத்துத்தம்பி மகாவித்தியாலயம்.]



மண்ணுலகு: 8 - 3 - 1930

விண்ணுலகு: 21 - 1 - 1991

திதி: 6 - 3 - 1991

எம்மில் அணையாத ஒளியாக மிளிர்ந்து நிறைந்த எம் தந்தையே! உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்;
மனைவி, மகள்.

''Spring'' K. K. S. Road,
Kokuvil, Jaffna.

[15690]

## 31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர்

### சின்னத்துரை கதிர்காமத்தம்பி

[இளைப்பாறிய கலால் பரிசோதகர்]



இறைவன் ஈந்தது: 1928 - 08 - 10

இறைவன் ஏற்றது: 1991 - 02 - 04

என்றும் முகமலர்ந்து அன்பு, பண்பு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றால் அனைவரையும் கவர்ந்த உங்களை, மாயமாய் வந்து கவர்ந்தானே காலன். உங்கள் அன்பையும், செயல்களையும் என்றென்றும் மறவோம். உங்கள் ஆத்மா இறைவனடியில் சாந்தியடைய எல்லாம் வல்ல பறாளாய் முருகனை வழுத்துகின்றோம்.

எமது குடும்பத் தலைவருடைய மரணச் சடங்கில் பங்குபற்றியோர்க்கும், உதவிகள் பல செய்தோர்க்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உங்கள் மறைவால் துயருறும்!
குடும்பத்தினர்.

''அன்னை இல்லம்''
சுழிபுரம்-கிழக்கு, சுழிபுரம்.

[16030]

## 1 ஆம் ஆண்டு நினைவு தினம்

தோற்றம்: 11 — 02 — 1910



மறைவு: 06 — 03 — 1990

அமரர்

### நாகபிள்ளை செல்வநாயகம்

உற்றார், உறவினர்கள் நலம் பேண அரிய பல நன்மைகள் புரிந்த, வஞ்சகமற்ற தூய உள்ளம் கொண்டதாயே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவுடன் வாழும்,
மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள், பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

வீரபத்திர கோவிலடி,
உடுப்பிட்டி.

[16018]

## செந்தில்குமரன் கட்டடக் கலைஞர்
## SENTHILKUMARAN ARCHITECTS

நவரத்தினராசா செந்தில்குமரன் ஆகிய நான் மாசி மாதத்திலிருந்து தனியாக இயங்கி வருகிறேன் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ந. செந்தில்குமரன்
B Sc. [AS], Dip-Arch, RIBA.
பட்டயம் பெற்ற கட்டடக் கலைஞர்,

''சரஸ்வதி வாசம்''
தாவடி, கொக்குவில். [16040]

## மொழி பெயர்ப்பாளர்கள் தேவை

ஆங்கில நாவல்களை, தமிழில் இலக்கிய தரம் குன்றாது மொழி பெயர்ப்புச் செய்வதற்கு மொழி பெயர்ப்பாளர்கள் தேவைப்படுகிறார்கள். அலுவலகத்தில் மொழி பெயர்ப்புச் செய்வதற்கு அல்லது வீட்டில் இருந்து கொண்டே மொழிபெயர்ப்புச் செய்வதற்குத் தகுதியுடைய மொழி பெயர்ப்பாளர்கள் வேண்டப்படுகிறார்கள் சகல விவரங்களுடனும் இம் மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

187, C/o உதயன்.

[16034]

### வட பிராந்திய முச்சக்கர மோட்டார்வண்டி ஊழியர் சங்கம்

## அறிவித்தல்

வட பிராந்திய முச்சக்கர மோட்டார்வண்டி ஊழியர் சங்க

வருடாந்தப் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகிகள் தெரிவும்

9 - 3 - 91 அன்று காலை 9-30 மணியளவில்

சங்கக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளதால், அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றனர்.

க. கீதநாதன்,
காரியதரிசி.

55, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம். [16042]

## அறிவித்தல்

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய அடியார்கள் அனைவருக்கும்

அன்புடையீர்!

அம்பாள் ஆலயத்தை மேலும் மேன்மையுறச்செய்ய வேண்டும் என்பது அம்பாள் அடியார்கள் பலரின் அபிலாஷையாகும். அதனைக் கருத்திற் கொண்டு, ஆலயத் தொண்டையும், திருப்பணிகளையும் முனனெடுத்துச் செல்வதற்கு பொது அமைப்பு ஒன்றை உருவாக்குவதன் அவசியம் உணரப்பட்டுள்ளது. அவ்வாறு செய்வதற்கு, தற்போதைய பரிபாலன சபையினதும், வழிபடுவோர் சங்கத்தினதும் பூரண ஆதரவும், ஒத்துழைப்பும் பெறப்பட்டுள்ளன.

1943 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 7 ஆம் திகதி எழுதப்பட்ட 194 ஆம் இலக்க உறுதி, அம்பாள் ஆலயம் ஒரு பொதுக்கோவில் எனச் சான்று பகர்கிறது பிரஸ்தாப உறுதியின் ஏழாம் இலக்கச் சரத்துக்கு அமைய, ஆகக் குறைந்தது 200 அடியார்களின் கையொப்பங்களைப் பெற்று, ஒப்பமிட்டோர் மத்தியில் ஒரு பொதுக்கூட்டத்தைக் கூட்டி, குழு ஒன்றைத் தெரிவு செய்யவுள்ளோம்.

இக்குழு, குறுகிய காலத்தில் யாப்பு ஒன்றினைத் தயாரித்து அங்கத்தவர்கள் கொண்ட பொதுக்கூட்டத்தில் அங்கீகாரத்தைப் பெறவேண்டும். யாப்பு அங்கீகாரம் பெறும் வரையான காலத்திற்கு, மேற்கூறப்பட்ட பிரகாரம் தெரிவுசெய்யப்பட்ட குழுவே. ஆலயத்திற்கான சகல செயற்பாடுகளையும், திருப்பணிகளையும் முன்னின்று செய்யும்.

உத்தேச குழுவைத் தெரிவு செய்வதற்கான பொதுக்கூட்டம், கோவில் முன்றலில் இம்மாதம் பத்தாம் திகதி [10 - 3 - 1991] பிற்பகல் 2-30 மணிக்கு நடைபெறும்.

சி. குகனேந்திரா,
இ. இராசநாயகம்,
நா. பேரின்பநாயகம்,
வே. கருணாமூர்த்தி.

[சி-5821]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பொன் முட்டையிடும் வாத்தைவெட்டலாமா?

கொடிகாமம், பளைப் பகுதிகளில் தென்னந்தோட்டங்கள் பெரும் அளவில் பாதிக்கப்பட்டு வருவதாகச் செய்திகள் வெளிவருகின்றன. போதிய பராமரிப்பு இல்லாமலும், முற்றுவதற்கு முன்னரே தேங்காய்கள் பறிக்கப்படுவதாலும், உச்சப்பலனைப் பெறமுடியாத நிலை உருவாகுவதாக அறிவிக்கப்படுகிறது.

வடமாகாணத்தில் தெங்கு உற்பத்தியில் முதலிடம் வகிப்பதாகக் கருதப்படும் முல்லைத்தீவு மாவட்டத்திலும், தென்மராட்சியைப் போலவே தென்னந் தோட்டங்கள் பாதிப்புற்று வருகின்றன என்பது தகவல்.

எமது உணவுத் தேவைகளுக்குத் தென்னிலங்கையை எதிர்பார்க்கக்கூடாது என்ற உணர்வு மக்கள் மத்தியில் முகிழ்த்து வருவதை அவதானிக்க முடிகிறது. நெருக்கடியான சூழ்நிலையே அந்த உணர்வுக்கான உந்துதல் ஆகும். வீடுகளில் சிறு அளவிலேனும் தோட்டம் செய்வதில் நாட்டம் அதிகரித்து வருவதைக் காண்கிறோம்.

பாதிப்பிலும் ஒரு நன்மை என்று வந்த இந்த மாற்றம், தற்காலிகமானதாக அல்லாமல நிரந்தரமாக வேண்டும். அப்போதே தமிழ்ப் பிரதேசங்களில் சுயதேவைப் பூர்த்திக்கு அத்திவாரம் இட முடியும்.

உற்பத்தியை நாடி புதிய உற்சாகமும், உணர்வும் தோன்றி வரும் இவ்வேளையில், ஏற்கனவே கைவசம் உள்ள உற்பத்தித் துறைகளைப் பாழாக்குவது கவலைக்குரியது. உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற இலக்குக்கு, இலட்சியத்துக்கு அது முரணானதாகும். உதாரணமாகத் தமிழ்ப் பகுதியில் உள்ள தெங்குத் தோட்டங்களை பராமரிக்காமலும், உரிய முறையில் பேணாமலும், பாதுகாக்காமல் விடுவது கண்டிக்கத்தக்கது.

தென்னை நீண்டகாலப் பயிர். அதனை நட்டு, வளர்த்து, பாதுகாத்துப் பயனைப் பெறுவதற்கு அதிக உழைப்பும், பொறுப்பும், பொறுமையும் தேவை. இந்த வருடம் ஒரு தென்னை காய்க்கத் தொடங்கியுள்ளது என்றால், அது ஆகக் குறைந்தது ஐந்து வருடத்திய கடும் உழைப்பினதும், சிரமத்தினதும், அக்கறையினதும் பெறுபேறே.

இப்போது காய்க்கிறது தானே, இயன்றளவு பயனைப் பெறுவோம் என்று தேங்காய்களைப் பிடுங்கிக் காசாக்கிவிட்டு, அதனைப் பராமரிக்காவிடில் பொன் முட்டை இடும் வாத்தை வெட்டிய கதையாக முடிந்துவிடும்.

தென்மராட்சியிலும், முல்லைத்தீவிலும் பல தென்னந் தோட்டங்கள் பொன்முட்டை இடும் வாத்து கொல்லப்பட்ட நிலைக்கே உள்ளாகி வருவதாகக் கிடைக்கும் செய்திகள் கவலை தருகின்றன. இந்த ஆபத்துத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். உணவு உற்பத்தியில் பல முன்னோடி நடவடிக்கைகளை எடுத்து வரும் தமிழீழ ஆய்வு நிறுவனம் போன்றவை, இதுவிடயத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

தென்னந் தோட்டங்களை உரிய காலத்தில் சரிவரப் பராமரிக்காதவர்கள், தென்னைகளைச் சண்டபடி தறிப்பவர்கள் ஆகியோரைக் கண்காணித்து நடவடிக்கை எடுப்பது அவசியம்.

---

# பெல்ஜியம் அரசால் நிறுவப்பட்ட அங்கவீனர் தொழில் நிலையம் மூடப்படும் நிலையில்

யாழ்ப்பாணம், மார்ச் 6

பெல்ஜியம் அரசால் நிறுவப்பட்ட அங்கவீனர் மறுவாழ்வு தொழில் நிலையம் மூடப்படும் அபாய நிலையில் இருந்து வருகிறது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கால், கை ஊனமடைபவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் பணியில் பெல்ஜியம் அரசின் கீழான 'அங்கவீனர்களுக்கான சர்வதேச நிறுவனம்' யாழ்ப்பாணத்திலும், மன்னாரிலும் அலுவலகம் அமைத்து இயங்கி வந்தது.

கை, கால் இழந்தவர்களை மீளவும் சுயநிலைக்கு கொண்டு வருவதற்கான பயிற்சிகளையும்—

ஜெய்ப்பூர் அவயவங்களை பொருத்தியவர்களை வழமையான வாழ்க்கைக்குத் திருப்புவதற்கான பயிற்சிகளையும் —

போலியோவால் பாதிக்கப்பட்ட சிறுவயதினருக்கான வைத்திய சிகிச்சைகளையும்- அளித்து வந்த இந்த நிறுவனம் முச்சக்கரவண்டி, கைத்தாங்கி போன்றவற்றையும் உற்பத்தி செய்து வந்தது.

இந்த நிறுவனத்தின் அதிகாரி டொமிக் ஜொராட் தற்சமயம் கொழும்பில் தங்கியுள்ளார்.

யாழ்ப்பாணம், மன்னார் சென்று இந்த அமைப்புக்களுக்கான வேலைகளைப் பார்வையிட அவருக்கு இலங்கை அரசு மறுப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன் இங்குள்ள தொழில் நிலையத்துக்கு தேவையான உபகரணம், உற்பத்திப் பொருள்களை அனுப்பவும் இலங்கை அரசு தடை விதித்துள்ளது.

இந்த நிறுவனத்தால் பயிற்சி அளிக்கப்பட்ட ஒன்பது பேர் யாழ்ப்பாணம், மானிப்பாய், பருத்தித்துறை, கிளிநொச்சி வைத்தியசாலைகளில் கடமையாற்றுகிறார்கள். [இ 3]

## இடைநடுவில் படகு திருப்பிவிடப்பட்டது

நெடுந்தீவு, மார்ச் 6

நெடுந்தீவில் இருந்து நூறுக்கும் அதிகமான பயணிகளுடன் குறிகாட்டுவான் நோக்கி வந்துகொண்டிருந்த குமுதினிப் படகு நயினாதீவில் வைத்து கடற்படையினரால் மீண்டும் நெடுந்தீவுக்குத் திருப்பி விடப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை இச்சம்பவம் நடந்தது.

நயினாதீவு முகாமில் இருந்து குறிகாட்டுவான் நோக்கி ஷெல் வீச்சுக்கள் இடம்பெற்றதே இதற்குக் காரணம்.

இந்தச் ஷெல் வீச்சினால் குறிகாட்டுவானில் தரித்து நின்ற படகுகள் சில சேதமடைந்தன. [இ-111]

## "போலோ மீ" ஆங்கில பரீட்சை ஏப்ரல் இறுதியில் நடக்கும்

இங்கிலாந்து வார்விக் பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் "போலோ மீ" [Follow me] தரம் 1 பரீட்சை இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் அனுசரணையுடன் இலங்கையிலும் நடத்தப்பட இருக்கிறது.

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, கொழும்பு உட்பட 24 நகரங்களில் இப்பரீட்சையை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

எதிர்வரும் ஏப்ரல் இறுதிப் பகுதியில் இப்பரீட்சை நடைபெறும். பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 15 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பரீட்சைத் திணைக்களத்தில் உள்ள வெளிநாட்டுப் பரீட்சைப் பிரிவுக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. [இ]

### தாய்-மகள் காயம்

நாவற்குழியில் இடம்பெற்ற லொறி - சைக்கிள் விபத்தில் சைக்கிளில் சென்ற தாயும், மகளும் தலையில் படுகாயமடைந்தனர்.

தாய் தமது மகளை பாடசாலைக்குச் சைக்கிளில் ஏற்றிச் சென்ற சமயமே விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தில் நாவற்குழியைச் சேர்ந்த பாக்கியநாதன் செல்வவதி [வயது29] அவரது மகள் ராஜி [வயது7] ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [ஒ-15]

### முறைசாராக் கல்வி உப-வள நிலையம்

யாழ்ப்பணம், மார்ச் 6

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் முறைசாராக்கல்வி உப - வள நிலையத்தை எதிர்வரும் எட்டாம் திகதி காலை 9 மணிக்கு யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் திறந்து வைப்பார். இ-3]

## நெல் விலையில் வீழ்ச்சி

ஒட்டுசுட்டான், மார்ச் 6

முல்லைத்தீவுப் பகுதியில் நெல் விலை வீழ்ச்சி அடைந்து வருகிறது. ஆயிரம் ரூபாவாக விற்பனையான ஒரு மூடை நெல் தற்பொழுது 750 ரூபாவாக விற்பனையாகிறது.

இதேவேளை, உழுந்து கிலோ 12 ரூபாவாகவும், கௌபி 25 ரூபாவாகவும் விற்பனையாகின்றன. [இ-113]

### கோவிலில் திருட்டு

அச்சுவேலி, மார்ச் 6

ஆவரங்கால் ஸ்ரீ நடராச இராமலிங்கேஸ்வரர் ஆலயம் [சிவன்கோயில்] ஞாயிற்றுக் கிழமை இரவு திருடர்களின் கைவரிசைக்கு உள்ளாகியது.

ஞாயிறு இரவு ஆலயத்துள் புகுந்த திருடர்கள் ஆலயக் கதவுகளைஉடைத்து, திறந்து மூல விக்கிரகங்களைப் புரட்டி பெறுமதி மிக்க பல பொருள்களைத் திருடிச் சென்றனர்.

### தமிழக சட்டசபை தேர்தல் மே மாதம்

புதுடில்லி, மார்ச் 6

எதிர்வரும் மே மாதம் தமிழக சட்டசபைக்கான தேர்தல் நடத்தப்படும்.

பிரதமர் சந்திரசேகர் அஹமதபாத்தில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில், மேற் கண்டவாறு சொன்னார். [இ-எ]

### தமிழ் தின விழா

யாழ்ப்பாணம், மார்ச்-6

யாழ். மத்திய கல்லூரி தமிழ் மன்றத்தின் தமிழ் தின விழா எதிர்வரும் வெள்ளிக் கிழமை காலை 10 மணிக்கு தம்பர் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. கலாநிதி இ. பாலசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். [இ-3]

### கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ். பல்கலைக்கழக தமிழ் மன்றத்தின் ஆதரவில் "இன்றைய சூழ்நிலைகளால் சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள உளத்தாக்கங்களும், அவற்றுக்கான தீர்வுகளும்" என்ற தலைப்பிலான கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். [இ-3]

## ஹர்த்தால்

யாழ்ப்பாணம், மார்ச் 6

மன்னாரில் உள்ள வங்காலைக் கிராமத்தில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஸ்ரீலங்காஇராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்து ஞாயிறன்று யாழ். மாவட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

ஹர்த்தால் தினத்தில் தனியார் கல்வி நிலையங்கள் அனைத்தும் வெறிச்சோடிக் காணப்பட்டன.

ஹர்த்தால் பூரண வெற்றி என்று தெரிவிக்கப்பட்டது.

## ஹெலி சூடு

கடலில் பிரயாணம் செய்து கொண்டிருந்த பொதுமக்களை நோக்கி ஹெலிக்கொப்டர் தாக்குதல் நடத்தியது.

அராலித்துறையில் கடந்த வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் நடந்தது. எவரும் காயம் அடையவில்லை. [இ-12]

## குப்பிளானில் ஒருவர் காயம்

பலாலி இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி குப்பிளானில் நாகையா இராசநாயகம் [வயது 43] என்பவர் காயமடைந்தார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். [ஒ-15]

## பஸ்ரா நகரைக் கைப்பற்ற சதாம் படைகள் முயற்சி

ஷியா மததீவிரவாதிகள் கட்டுப்பாட்டில் உள்ள பஸ்ரா நகரை மீண்டும் கைப்பற்ற சதாம் ஹுசேனின் ஈராக்கிய புரட்சிக் காவலர் படையினர் முயற்சித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

டாங்கிகள் சகிதம் புரட்சிக் காவலர்கள் படைப்பிரிவு ஒன்று பஸ்ராநோக்கிச்செல்வதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை — பக்தாத்துக்கு சதாம் எதிர்ப்புக் கிளர்ச்சி பரவ ஆரம்பித்துள்ளதாகவும் ஈராக்கின்சகல மாகாணங்களிலும் குழப்பம் ஏற்பட்டிருப்பதாகவும் லண்டன் பத்திரிகைகள் நேற்று செய்தி வெளியிட்டன.

அதே சமயம், ஷியா மத தீவிரவாதிகள் கட்டுப்பாட்டில் உள்ள இரண்டு மாகாணங்களுக்கு உணவுப்பொருள்கள் அனுப்புவதை நிறுத்தும்படி ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் உத்தரவிட்டுள்ளார்.

ஷியா தீவிரவாதிகளுக்கும், ஈராக்கிய அரசுப் படைகளுக்கும் இடையே இடம்பெற்று வரும் சண்டையில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

அல்ஹமாறா என்ற நகரில் உள்ள ஈராக்கிய குடியரசுக் காவல் படையின் ஒரு படை அணியைச் சரணடையும்படி ஷியா மத தீவிரவாதிகள் உத்தரவிட்டுள்ளனர். [இ-எ]

## ஹெலி மூலம் அமெரிக்க படைகள் தரை இறக்கம்

ஈராக் தலைநகர் பக்தாத்தில் இருந்து சுமார் நூறு மைல் தொலைவில் உள்ள ஓரிடத்தில் ஹெலிக்கொப்டர்கள் மூலம் அமெரிக்கப் படைகள் கடந்த சனிக்கிழமை தரையிறங்கின என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை யுத்த நிறுத்த மீறலாகும் என்று ஈராக் தெரிவித்துள்ளது.

ஐ. நா. பாதுகாப்புச் சபைக்கு எழுதிய கடிதம் ஒன்றில், இடைக்கால யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்ட பின்னர் அமெரிக்க தலைமையிலான பன்னாட்டுப் படைகள் தொடர்ந்தும் யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபட்டு வருகின்றன என்று ஈராக் வெளியுறவு அமைச்சர் தாரீக் அஸீஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## இணைப்புச் சட்ட ரத்து வேலைகள் ஆரம்பம்

★ குவைத்தை ஈராக்கின் 19 ஆவது மாகாணமாக இணைத்துக் கொண்டது தொடர்பான சகல சட்டங்களையும், ஆணைகளையும் ரத்துச் செய்வது தொடர்பான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று ஈராக் அரசு அறிவித்து உள்ளது.

நிரந்தர யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு அமெரிக்கா விதித்துள்ள நிபந்தனைகளில் இதுவும் ஒன்றாகும்.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் 2 ஆம் திகதி குவைத்தைக் கைப்பற்றிய ஈராக் பின்னர் அந்த நாட்டை தனது 19 ஆவது மாகாணமாகப் பிரகடனப்படுத்தி சட்டமியற்றியது தெரிந்ததே.

## குவைத்தில் இளவரசர் அல்சபா

குவைத் முடிக்குரிய இளவரசர் சுல்தான் அல்சபா கடந்த திங்கட்கிழமை குவைத் திரும்பினார்.


குவைத் சர்வதேச விமான நிலையத்தில் இராணுவ விமானம் ஒன்றில் போய் இறங்கிய முடிக்குரிய இளவரசர் முதலில் நிலத்தில் வீழ்ந்து மண்ணை முத்தமிட்டார்.

குவைத்தை ஈராக் ஆக்கிரமித்த பின்னர் தப்பி ஓடிய முடிக்குரிய இளவரசர் கடந்த ஏழு மாதங்களாக சவூதி அரேபியாவில் தஞ்சமடைந்திருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 ஆம் ஆண்டு நினைவு நாள்

டெனிஸ் சூஸைராஜா



தோற்றம்:

16 - 07 - 1941

மறைவு:

06 - 03 - 1988

ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்.

அன்பு மனைவி,
பிள்ளைகள்.

12/9, மத்தியூஸ் வீதி, யாழ்நகர். [15692]

# மரண அறிவித்தல்கள்

## இராசரத்தினம் துரைராசா

அளவெட்டியைச் சேர்ந்த இராசரத்தினம் துரைராசா [Retired R. M. P] 5 - 3 - 91 செவ்வாய் சிவபதமடைந்தார். இவர் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் ஜெயலஷ்சுமி, ஜெயராணி [Swiss], சிறீஸ்கந்தா, சிவகுமார் [U. K] ரவிக்குமார் [Denmark], இந்திரகுமார் [France] ஆகியோரின் அன்புத்தந்தையும் சிவலிங்கம் [Glenesh Estate, அவிசாவலை,] ரவீந்திரன் [Swiss], ஸ்வரூபராணி [போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்] குலமங்கை [U. K], ரஜனி [France] ஆகியோரின் மாமனும் நிசாந்தி, தினேஷ், நிரோசா ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் [5 - 3 - 91] செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
சிறீஸ்கந்தா

''ஜெயவாசம்''
அளவெட்டி [15693]

## திருமதி
## சிவக்கொழுந்து திருநாவுக்கரசு

மாவிட்டபுரம் குமாரகோவிலடியைச் சேர்ந்த. திருமதி சிவக்கொழுந்து திருநாவுக்கரசு 1-3-91 இல் காலமானார். இவர் சி. திருநாவுக்கரசுவின் [முன்னாள் அதிபர், நடேஸ்வராக் கனிஷ்ட வித்தியாலயம்] அன்பு மனைவியும், மகேந்திரன் [உதவி வைத்திய அதிகாரி], வேல்பிரசாதம் [முன்னாள் லிகிதர் - எண்ணெய் கொழுப்புக் கூட்டுத்தாபனம்], செந்திருதேவி [காப்புறுதிக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்], கருணாதேவி [ஆசிரியை, மன்னம்பிட்டி மகாவித்தியாலயம்] ஆகியோரின் அருமைத் தாயாரும், மல்லிகாபுஷ்பம், ரவிச்சந்திரிகா, சித்திரவேலாயுதம் [நில அளவையாளர்] சிவாஜி [ஆசிரியர் - ஸ்கந்தவரோதயாக் கல்லூரி] ஆகியோரின் அருமை மாமியாரும், நிஷாகரன், திபாகரன், ஜெயகரன், தேவகரன் காலஞ்சென்ற திருவேரசன், சிவப்பிரியா, திருவரங்கன், சிவப்பிரதா, திருலெளகீகன், திருக்குமாரன் ஆகியோரின் அன்புப் பேத்தியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 1-3-91 இல் நீர்வேலியில் நடைபெற்றன என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்:
வே. சித்திரவேலாயுதம்
[மருமகன்]

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. [14923]

## நாகமுத்து தம்பிராசா

நாகமுத்து தம்பிராசா அவர்கள் அகால மரணம் ஆனார்.

அன்னார் திருமதி பாக்கியம் தம்பிராசாவின் அன்புக் கணவரும், தேவராசா, யோகராசா [கனடா], கௌசலா, சித்திரா ஆகியோரின் அன்புத் தந்தையும் சின்னத்தம்பி, நடேசு செல்லத்துரை, தம்பித்துரை [கனடா], தங்கச்சியம்மா, றோசம்மா, இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்லத்தம்பி வசந்தகுமாரி, ஜெயக்குமாரி ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்மலிங்கம், தம்பிப்பிள்ளை நற்குணசிங்கம், திருநாவுக்கரசு ஆகியோரின் மைத்துனரும், பாலசுந்தரத்தின் சகலனும், அலன், நிகேசன், வாசவன், விசாகன், துரிதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [6-3-91] காலை 9.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

கொக்குவில்.
[கலட்டி]

தகவல்:
தேவராசா

[15694]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 06 - 3 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## கூட்டம்

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த பயிலுநர் ஆசிரியர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

நல்லூர் உ. அ. அ. பிரிவு பயிலுநர் ஆசிரியர் சங்க வட்டாரங்கள் இத் தகவலைத் தெரிவித்தன. [உ]

## சோதனை

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவின் கொலை தொடர்பாக கொழும்பில் உள்ள தமிழ்க் குழு ஒன்றின் அலுவலகம் நேற்று பொலீஸாரால் முற்றுகையிடப்பட்டு சோதனையிடப்பட்டது

கொழும்பு மாநகரில் விடுதிகள், வர்த்தக நிலையங்கள், வீடுகள் மற்றும் தங்குமிடங்கள் ஆகியவற்றில் பொலிஸார் தொடர்ந்து சோதனை நடத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அஞ்சலி

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவின் பூதவுடலுக்கு எதிர்க்கட்சி எம். பிக்களும் அஞ்சலி செலுத்தினர்.

எதிர்க்கட்சி எம். பியான திரு. வாசுதேவநாணயக்காரா அமைச்சரின் பூதவுடல் முன்னால் சில நிமிடங்கள் நின்று முகத்தில் வேதனை வெளிப்பட அஞ்சலி செலுத்தினார்.

### ப. நோ. கூ. சங்கங்....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

நேற்றைய கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏனைய முக்கிய தீர்மானங்கள் வருமாறு:

★ யாழ். மாவட்டத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களில் 75 வீதமானவற்றை ப. நோ. கூ. சங்கங்கள் கொழும்பிலிருந்து கொண்டு வர ஏற்பாடு செய்தல்.

★ ப. நோ. கூ. சங்கங்களிடம் தரகுப் பணம் அறவிடுவதை மக்கள் வங்கி நிறுத்த வேண்டும்.

★ கிராமிய வங்கிகள் மூலம் ஓய்வூதியம் வழங்க இலங்கை வங்கி ப. நோ. கூ. சங்கங்களுக்குப் பணம் வழங்க வேண்டும். [அ-3]

### முரசுமோட்டை....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இச்சம்பவத்தில் காயமடைந்தனர்.

இறந்த பெண்மணியின் சடலத்திலிருந்து துண்டிக்கப்பட்ட தலை மரம் ஒன்றில் தொங்கிக்கொண்டிருக்கக் காணப்பட்டது.

சம்பவம் நடந்த இடத்தில் 35இற்கும் அதிகமான ஆடுகள் இறந்து கிடக்கக் காணப்பட்டன.

அருகில் இருந்த சில வீடுகளும் சேதமடைந்தன. [உ-76-15]

### யாழ். கலட்டி...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வெடித்ததில் வளவில் அச்சமயம் நின்றிருந்த நாகமுத்து தம்பிராசா [வயது 55] என்பவர் உயிரிழந்தார்.

அதே இடத்தைச் சேர்ந்த எஸ். இராயப்பு [வயது 43] என்பவர் காயமடைந்தார்.

இக்குண்டு வெடிப்புச் சிதறல்களினால் யாழ். பல்கலைக் கழகத்தில் நின்ற முதலாம் ஆண்டு விஞ்ஞானபீட மாணவர்களான சுதர்சன், பாஸ்கரன் ஆகியோரும் காயமுற்றனர்.

அப்பகுதியிலிருந்த கராஜ் மற்றும் பேக்கரி இக்குண்டு வீச்சினால் சேதமடைந்தன.

மீண்டும் பிற்பகல் 3.30 மணியளவில் அதே இடத்தில் குண்டு வீச்சு இடம்பெற்றது.

ஐந்து கடைகள் முற்றாகச் சேதமடைந்தன.

இரண்டாவது தடவை வீசப்பட்டகுண்டுகளில் ஒன்று [illegible] பகுதியில் [illegible] [உ-143-3-15-69]

## புலிகளின் நிலைகள் மீதுதான் தாக்குதலாம்!

கொழும்பு, மார்ச்6

யாழ் குடாநாட்டில் விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது தான் விமானத் தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன.

—இவ்வாறு கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா கொலை செய்யப்பட்ட பிறகு கடந்த ஞாயிறு முதல் இத்தாக்குதல்கள் இடம்பெற்று வருவதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார், [உ-எ]

## ஆனையிறவில் மோதல்

யாழ்ப்பாணம், மார்ச் 6

ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியில் கடந்த ஞாயிறு மாலை 5 மணி முதல் நள்ளிரவு 12.30 மணிவரை கடும் மோதல் இடம்பெற்றது.

முகாமிலிருந்து படையினர் ''பரா லைட்'' வெளிச்சத்தில் 50 கலிபர் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்திய வண்ணம் வெளியேற முற்பட்டபோதே மோதல் ஏற்பட்டது.

இந்த மோதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் மலையான் [தேவநாயம் அன்ரனி ஜேசுநாயகம் — காங்கேசன்துறை] வீரமரணமடைந்தார். [உ]

## ஊர்காவற்றுறையில்

யாழ்ப்பாணம், மார்ச் 6

ஊர்காவற்றுறை முகாமிலிருந்த இராணுவத்தினர் நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் சுருவில். சின்னமூளாய்ப் பகுதிகள் ஊடாக வெளியேற முற்பட்டபோது விடுதலைப் புலிகள் அவர்களை வழிமறித்துத் தாக்கினர்.

பிற்பகல் ஒரு மணிவரை சண்டை நடைபெற்றதாகவும்—

மிதிவெடியில் சிக்கி இராணுவச் சிப்பாய் ஒருவர் காலை இழந்ததாகவும்—

இராணுவத் தரப்பில் மேலும் சேதம் ஏற்பட்டதாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

மோதலையடுத்து முகாமுக்குப் பின்வாங்கிய படையினர் அங்கிருந்து குடியிருப்புகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர். இதனால் மூன்று வீடுகள் சேதமடைந்தன. கால்நடைகளும் இறந்தன. [உ]

## கைதான தமிழ் இளைஞர்கள் விடுவிக்கப்படுகின்றனராம்!

கொழும்பு, மார்ச் 6

அமைச்சர் விஜேரத்தினாவின் கொலையை அடுத்து கொழும்பில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள், அவர்கள் பற்றிய நற்சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படுவதைத் தொடர்ந்து விடுவிக்கப்பட்டு வருவதாக கொழும்பில் பொலீஸார் தெரிவித்தனர். வெரித்தாஸ் வானொலி இதனை அறிவித்தது.

இதனிடையில்—

விஜேரத்தினாவின் கொலைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று பொலீஸார் குற்றஞ்சாட்டி உள்ளனர் என்றும் வெரித்தாஸ் வானொலி அறிவித்தது. [உ-எ]

## ரஞ்சன் கொலை குறித்து துப்புத் தந்தால் ரூ. 10 லட்சம்

கொழும்பு, மார்ச் 6

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான துப்புத் துலக்கும் தகவல்களைக் கொடுப்பவர்களுக்கு பத்து லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என்று பொலீஸ் மா அதிபர் ஏர்னெஸ்ட் பெரேரா நேற்று அறிவித்தார்.

தகவல் கொடுப்போர் பற்றிய விவரங்கள் அந்தரங்கமாகப் பேணப்படும் என்றும் பொலீஸ் மா அதிபர் அறிவித்துள்ளார்.

## வாசுவைக் கண்டித்து சபையில் தீர்மானம்!

கொழும்பு, மார்ச் 6

சபாநாயகர் ஆசனத்தில் பலவந்தமாக அமர்ந்ததற்காக, ஐக்கிய சோஷலிச அணி எம். பியான வாசுதேவ நாணயக்காராவைக் கண்டிக்கும் பிரேரணை ஒன்று நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

கடந்த மாதம் 21ஆம் திகதி நாடாளுமன்றக் கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது ஒரு கட்டத்தில், திரு. நாணயக்காரா சபாநாயகர்ஆசனத்தில் ஏறிஅமர்ந்துகொண்டார் என்பதும் —

அதனைத் தொடர்ந்து சபையில் குழப்பம் ஏற்பட்டு, பின்னர் அது எம். பிக்கள் மோதலில் முடிந்தது என்பதும் தெரிந்ததே.

இதற்காக திரு. நாணயக்காராவைக் கண்டிக்கும் பிரேரணையை நேற்று சபைமுதல்வரும் அமைச்சருமான திரு. ரணில் விக்கிரமசிங்கா கொண்டுவந்தார்.

எதிர்க்கட்சி எம். பிக்கள் எவரும் நேற்று சபைக்குச் செல்லவில்லை. [உ-எ]


## Northern Province Cancer Society

All Members of the Executive Committee of the N. P. Cancer Society are kindly invited to be present at a Committee Meeting to be held on sunday 10th March at 9-30 a. m., at the "Sri Sai Ram Clinic" 410, Kankesanturai Road, Jaffna [Opposite my Residence], as several important decisions have to be taken.

PRESIDENT.

[C-5816]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org